முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.08.2022**, செவ்வாய்கிழமை

1. தவமாக தரணிகாக்க வந்த
 தருமனே ஆறுமுக அரங்கனே
 அவதாரமாக ஆறுமுகப்பெருமான்
 ஆற்றலாக வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
 தெரிவிப்பேன் அருளாசி தன்னை
 ஆசிபட சுபகிருது நள்ளி திங்கள்
 அறிவிப்பேன் முப்பானோர்திகதி குசன் வாரம்
 (சுபகிருது வருடம் ஆடி மாதம் 31 நாள், 16.08.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் மானக்கஞ்சாற நாயனாரும்
 வழங்குவேன் உலகநலம் காண
 ஆறுமுக அரங்கன் பேரில்
 அனுதினமும் பூசை செய்து
4. செய்துமே அன்னதானம் எனும்
 சேவையை உலகோர் தொடர
 மெய்ஞானம் தரும் அரங்கனை
 முழுமைபட சரணடைவு கொண்டு
5. கொண்டுமே சன்மார்க்கம் பற்றி
 குருவே என ஜீவ தயவான நல்
 தொண்டதனை ஏற்று உலகினில்
 தொண்டனாய் தனை மாற்றி
6. மாற்றியே அரங்கன் தேடுகின்ற
 மகத்துவமுள்ள உயர் மக்களாய்
 ஆற்றல் பெருகிட வாழ்ந்துவர
 அனுகுவார் அனைத்து பெருமக்களும்
7. மக்களும் ஞானிகள் ஆகியே
 மரணம் வென்று நிலைப்பர்
 தேக்கமின்றி உலகம் எங்கிலும்
 தேசிகனார் தெய்வ நெறி பரப்பி
8. பரப்பியே உலகம் அனைத்தும்
 பண்பானவர் கூட்டம் பெருக்கி
 வரம்பல கொண்ட அரங்கன்
 வழிகாட்டலை அனைவரும் ஏற்ற வண்ணம்
9. வண்ணமுடன் உலக மாற்றம்
 வடிவேலன் ஆட்சி காலமாக
 எண்ணம் தூய்மை கொண்ட
 இணையிலா ஞானவான்கள் நிறைந்த

10. நிறைந்த சபையாக மாற்றி
நிலவுலகில் ஞான ஆட்சி தருவேன்
அறம் கொண்ட ஆளுமையும்
அன்பு தயவு கலந்த அதிகார

11. அதிகார வர்க்கங்களை நிரப்பி
ஆளுமை தருவேன் எனும் அரங்கன்
விதிமாற்றும் அவதாரம் இருக்க
விரைந்து உலகோர் வர அற்புதம் நிகழும்
அருளாசி முற்றே

–சுபம்–